**O.S.No.9/2024**

வா.சா.1 திருமதி. புஷ்பவள்ளி

நாள் : 30.06.2025 நேரம் : 11.35 AM

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 1, 7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**

நான் தற்போது குடியிருக்கும் வீடு எனது சொந்த வீடு என்றால் சரிதான். அந்த வீடு சுமார் 9 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டது என்றால் சரியல்ல. 4 வருடங்கள் தான் ஆகும். நான் தாவாச் சொத்தை பொதுவாக அனுபவம் செய்கிறேனா என்றால் எனக்கு பங்கு எதுவும் கொடுக்கவில்லை. அதனால் நான் அனுபவம் செய்யவில்லை. நான் தற்போது தாவா சொத்தில் வீடு கட்டியுள்ளேனா என்றால் சரியல்ல எனது சொந்த நிலத்தில் தான் வீடு கட்டியுள்ளேன். 1ம் பிரதிவாதி இராஜேந்திரன் என்பவரும் தாவா சொத்தில் வீடு கட்டவில்லை அவரது சொந்த நிலத்தில்தான் வீடு கட்டியுள்ளார் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கின் 3ம் பிரதிவாதி மலைராஜ்க்கு மனைவி மற்றும் ஒரு மகள் உள்ளனர், மலைராஜ் 10 வருட காலங்களுக்கு முன்பு எங்கே இருந்தார் என்று எனக்கு தெரியாது. மேற்படி மலைராஜ் வேறு திருமணம் செய்துகொண்டு வேறு எங்கோ சென்றுவிட்டார் என்று சொன்னால் சரிதான். மேற்படி 3ம் பிரதிவாதி இந்த வழக்கில் தோன்றாதரப்பினராகியுள்ளார் என்று சொன்னால் சரிதான். மேற்படி 3ம் பிரதிவாதிக்கு பதிலாக அவரது மனைவி லிங்கம்மாள் மற்றும் மகள் ஜெயலட்சுமி ஆகியோர்களை நான் இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி 3ம் பிரதிவாதியின் மனைவி மற்றும் மகளை இந்த வழக்கில் சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டியது என்று சொன்னால் சரியல்ல. 9 மற்றும் 10ம் பிரதிவாதிகள் எனது மகன்கள் என்று சொன்னால் சரிதான். மேற்படி தாவா சொத்துக்கள் பாகம் பிரிக்கப்பட்டுவிட்டதால்தான் எனது மகன்கள் வாதிகளாக இந்த வழக்கை நடத்த முன்வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் 2ம் வாதி எனது

மகள் என்று சொன்னால் சரிதான். எனது மகள் 2ம் வாதி திருமணம் முடிந்து வெளியூரில் வசித்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். மேற்படி எனது மாமனாருக்கு உரிமைபட்ட தாவாச் சொத்துக்களை எனக்கு 1/6 பாகம் கோர உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது மகன்களான 9, 10 பிரதிவாதிகளுக்கு பதிலாக எனக்கு பாகம் கோர உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனவே 9 மற்றும் 10 பிரதிவாதிகளுக்கு 1/6 பாகம் கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் தாவாச் சொத்துக்களை பாகம் பிரிக்காமல் என்னை அலைக்கழிப்பதாக சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். மேற்படி சங்கதிக்கு என்னிடம் ஆதாரங்கள் இல்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி பாகம் பிரிக்கக்கோரி நான் வழக்கறிஞர் அறிவிப்பு ஏதேனும் பிரதிவாதிகளுக்கு அனுப்பினேனா என்றால் அனுப்பியுள்ளேன். தாவா 1வது இலக்கச் சொத்து 2001ம் வருடத்திலேயே எனது கணவர் உயிருடன் இருக்கும் சமயத்திலேயே 3ம் பிரதிவாதி மலைராஜ்ன் மனைவி மற்றும் மகளுக்கு இனாம் செட்டில்மெண்ட் மூலம் ஒதுக்கப்பட்டுவிட்டது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு படிக்கத் தெரியாது. என்னிடம் காட்டப்படும் இனாம் செட்டில்மெண்ட்டில் உள்ள கைரேகை என்னுடையதுதான் அந்த பதிவு செய்யப்படாத இனாம் செட்டில்மெண்ட் **பி.வா.சா.ஆ.1 (வாதி தரப்பு வழக்கறிஞர் பதிவு செய்யப்படாத ஆவணம் என்பதால் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது).** தாவா 1வது இலக்கச்சொத்தில் நான்குமாலில் மேற்குபக்கத்தில் 1ம் பிரதிவாதி இராஜேந்திரன் வீடு உள்ளது என்று சொன்னால் சரிதான் ஆனால் பிராதில் நான்குமாலில் மேற்குப்பக்கம் வாதிகள் வீடு உள்ளது என்று தவறாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களின் நான்குமால்கள் தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா 3 இலக்கச் சொத்துக்களுக்கும் கிராம கணக்குப்படி கிராம நிர்வாக அலுவலரிடம் நான்குமால்கள் சான்றுபெற்று இந்த வழக்கிற்கு தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவாச் சொத்துக்கள் எனது

கணவர் உயிருடன் இருந்த காலத்திலேயே பாகம் பிரிக்கப்பட்டு அவரவர் தனித்த பாத்தியத்தில் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் தாவாச் சொத்துக்களை கூட்டாக அனுபவம் செய்துவரவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால் தாவா வழக்கிற்கு சரியான நீதிமன்றக் கட்டணம் செலுத்தவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா 3 இலக்கச் சொத்துக்களுக்கு அரசு மதிப்பீடு வழிகாட்டு சான்றிதழ் தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஏற்கனவே பிரிக்கப்பட்ட தாவா சொத்துக்களுக்கு எந்தவித பிரச்சனைகளும் சரியான காரணங்களோ வழக்கிற்குரிய மூலங்களோ ஏற்படாததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்று சொன்னால் சரியல்ல தாவா சொத்துக்கள் பாகம் பிரிக்கப்படவில்லை. வாதிகள் இருவரும் வீணாக, வன்மமாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் தூய கரங்களுடன் நீதிமன்றத்தை நாடவில்லை என்றாலும் வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னாலும் சரியல்ல.

விசாரணை முடிவுற்ற நேரம்:12.00 PM

APARNA JUDIT CHARLES

Digitally signed by APARNA JUDIT CHARLES
Date: 2025.06.30 17:14:36 +0530